Registered as a news paper. பக்கங்கள்: எட்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 வைகாசி 01 ஹிஜ்ரி 1427 ற.ஆகிர் 16 (15.05.2006) திங்கட்கிழமை இதழ் 227

# தீவகத்தில் ஒரே இரவில்

# 13 அப்பாவிகள் கொலை



பச்சிளம் பாலகர்களோடு படுக்கையில் வைத்து சுட்டுத்தள்ளப்பட்ட குடும்பம்

யாழ்ப்பாணம்—

தீவகத்தில் நேற்றுமுன்தினம் இரவு ஆயுதக் குழுவினர் நடத்திய வெறியாட்டத்தில் 4 மாதக் குழந்தை உட்பட 13 பேர் படு கொலை செய்யப்பட்டனர்.

அத்துடன், சுமார் 20 கடைகள் திட்டமிட்டு எரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டன. இந்தச் சம்பவத்தை அடுத்து தீவகப் பகுதி மக்கள் பெரும் பீதியடைந்துள்ளதுடன் குடாநாடெங்கும் பதற்றமான நிலை தோன்றி யுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த இந்தக் கோர வெறியாட்டத்தில் -

அல்லைப்பிட்டியில் ஒன்பது பொதுமக்களும் - புளியங்கூடலில் மூவரும் -

வேலணை - வங்களாவடியில் ஒரு வருமாக 13 அப்பாவிப் பொதுமக்கள் ஒரே இரவில் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் இருவர் படுகாயமுற்றனர்.

## கோப்பாயில் இளைஞர் பலி!

## அல்லைப்பிட்டியில் வெறியாட்டம்:

## கோப்பாயில் இளைஞர் பலி!

யாழ்ப்பாணம் —

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கும் - நாவலர் பாடசாலைக்குமிடையில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன் சிறுமி ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுப்பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பரமேஸ்வரன் கோபிஜன் (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஆவரங்காலில் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம் —

ஆவரங்கால் சந்தியில் நேற்று அடையாளம் தெரியாத நபர்களால் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 8.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஆவரங்கால் தெற்கைச் சேர்ந்த கச்சான் வியாபாரியான இராமச்சந்திரன் - தவேந்திரன் (வயது-28) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலியிலும் இளைஞர் கொலை!

யாழ்ப்பாணம் —

அச்சுவேலி பஸ் நிலையத்தில் நேற்றுக்காலை அடையாளம் தெரியாத நபர்களால் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 8 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த பசுவலிங்கம் காண்டீபன் (வயது 26) என்பவரே சுட் டுக்கொல்லப்பட்டவராவார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் 2 இளைஞர்கள் கொலை!

திருகோணமலை —

திருகோணமலை-மூதூரில் இரு தமிழ் இளைஞர்கள் நேற்று சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ள மூதூர்-பெரியபாலம் கிராமத்தில் இரு சக்கர உழவு இயந்திரத்தில் பயணித்துக்கொண்டிருந்த போது அடையாளம் (08 ஆம் பக்கம் பார்க்க)

# அல்லைப்பிட்டியில் வெறியாட்டம்; 9 அப்பாவி பொதுமக்கள் இரை!

யாழ்ப்பாணம் —

தீவகத்தின் நுழைவாயிலான அல்லைப்பிட்டியில் வீடொன்றினுள் புகுந்த ஆயுதக் குழுவினர் நான்கு மாதக் குழந்தை உட்பட ஒன்பது அப்பாவிப் பொதுமக்களை கோரமாகப் படுகொலை செய்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் அல்லைப்பிட்டி கடற்படைத் தளத்துக்கு அருகில் பாரிய குண்டுச் சத்தம் கேட்டதையடுத்து அல்லைப்பிட்டி இரண்டாம் வட்டாரத்திலுள்ள வீடுகளுக்குள் புகுந்த ஆயுதக் குழுவினர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒன்பது பேர் உயிரிழந்தனர்.

வீட்டினுள் உறக்கத்திலிருந்த (08 ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்கூடலில் மூவர் கோரமாக கொலை!

யாழ்ப்பாணம் —

ஊர்காவற்துறை- புளியங்கூடலில் வீடொன்றினுள் புகுந்த இனந்தெரியாத ஆயுதக் குழுவினர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரை கோரமாக சுட்டுப்படுகொலை செய்தனர்.

இவர்கள் நடத்திவந்த தொலைத்தொடர்பு நிலையம் மற்றும் 19 இற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் தீயிட்டு எரிக்கப்பட்டன.

நேற்று முன்தினமிரவு 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எம்.சண்முகலிங்கம் (வயது 60), அவரது மனைவி சண்முகலிங்கம் (08 ஆம் பக்கம் பார்க்க)

## வேலணையிலும் ஒருவர் கொலை!

யாழ்ப்பாணம் —

வேலணை-வங்களாவடி சந்தியில் நேற்றுமுன்தினமிரவு இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். அத்துடன் வர்த்தக நிலையங்கள் பல தீயிட்டு எரிக்கப்பட்டன. (08 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுவின் அலட்சியமே படுகொலைகள் தொடரக் காரணம்!

### யாழ்.அரசியற்துறை கண்டனம்


யாழ்ப்பாணம் —


படுகொலைகள் தொடர்பாக கொலையுண்டவர்களின் உறவினர்கள், காயமடைந்தோர் ஆகியோருடன் போதிய ஆதாரங்களையும், சாட்சிகளையும் சமர்ப்பித்திருந்தும் இதற்குப் பொறுப்பானவர்கள் குறித்த உண்மையை கண்காணிப்புக்குழு பகிரங்கமாக வெளிப்படுத்தாத காரணத்தினாலேயே தொடர்ந்தும் படுகொலைகள் நிகழ்வதாக யாழ்.மாவட்ட (08 ஆம் பக்கம் பார்க்க)

# தீவகத்தில் ஆயுதக் குழுவினர் நடத்திய வெறியாட்டம்!







யாழ்ப்பாணம் மனோகரா
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த
மூன்றாவது வெற்றி வாரம்
திருப்பதி

காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
S.J.சூர்யா - நயன்தாரா
நடித்த
கள்வனின் காதலி
காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

## மேலும் 31 தமிழ் அகதிகள் தமிழ் நாடு சென்றனர்

ராமேஸ்வரம் —

தனுஷ்கோடி அரிச்சல் முனை மற்றும் பாம்பன் குந்துகால் கடற்கரைப் பகுதிக்குத் தமிழ் அகதிகள் 31 பேர் படகு மூலம் நேற்று முன்தினம் அதிகாலை சென்றடைந்தனர்.

திருகோணமலை, திருக்கடலூர் பகுதியில் இருந்து 5 குடும்பங்களைச் சேர்ந்த 6 குழந்தைகள் உள்பட 17 பேர் படகு மூலம் தனுஷ் கோடி அரிச்சல் முனை கடற்கரைப் பகுதிக்கு கடந்த சனிக்கிழமை அதிகாலை சென்றனர்.

இவர்கள் படகுக் கட்டணமாக தலா ரூபா 7 ஆயிரம் கொடுத்து வந்ததாகத் தெரிவித்தனர்.

வவுனியாவில் இருந்து 4 குடும்பங்களைச் சேர்ந்த 2 குழந்தைகள் உள்பட 14 பேர் பாம்பன் குந்துகால் கடற்கரைப் பகுதிக்குக் கடந்த சனிக்கிழமை அதிகாலை சென்றனர்.

இவர்கள் தாம் படகுக்கட்டணமாக தலா ரூபா 10 ஆயிரம் கொடுத்ததாகத் தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரும் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இதையடுத்து, இதுவரை தமிழகம் வந்த அகதிகளின் எண்ணிக்கை 805 ஆக உயர்ந்துள்ளது.

## க.பொ.த.சாதாரண பரீட்சையில் 29,000 பேர் சித்தியடையவில்லை

கொழும்பு —

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய 4 லட்சத்து 49 ஆயிரத்து 679 மாணவர்களில் 22 ஆயிரத்து 900 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தியடையத்தவறியுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை 6 பாடத்துக்கு குறைவான பாடங்களில் தோற்றிய மாணவர்களில் 29 ஆயிரத்து 688 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தியடையவில்லை. இந்த முறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 46.6 வீதமானவர்களே உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
03
05
1935



மறைவு
25
05
2005

## திருமதி. வைரமுத்து செல்வமணி

அன்பின் திருவுருவாய்
ஆறுதல் அளிக்கும் அன்னையாய்
இன்பம் நிறைந்த பண்புடைய இல்லத்தரசியாய்
ஈன்றெடுத்த செல்வங்களின் அன்புத் தெய்வமாய்
உற்றார்க்கு உறுதுணையாய்
ஊரார் போற்றிப் புகழும் உத்தமியாய்
எங்களின் உள்ளங்களில் பூத்த மலராய்
ஏட்டுக் கல்வி கற்க எழுத்தாணியாய்
ஐயம் தீர்த்து நின்ற எங்கள் அன்புத் தெய்வமாய்
ஒரு நாளும் உங்களை மறந்திடமாட்டோம்
ஓர் ஆண்டு போனதம்மா
உங்கள் நினைவுகளில் நின்றுவாடும் நாம்
உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

ஆதி காளி கோவிலடி
தாவடி தெற்கு
கொக்குவில்.

[2271]

# கேள்வி விளம்பரம்

கிளிநொச்சி மாவட்ட செயலகமும் கூட்டு நிர்வாக அலகுக் கட்டிட 1ஆம் தொகுதி (SCAP) கட்டுமான வேலைக்கான கேள்வி விண்ணப்பங்கள் கிளி/மாவட்ட செயலக கேள்விச் சபையினால் கோரப்படுகின்றது. இக்கேள்விக்கு பெறுமதி சேர்வரியில் தங்கள் பெயரைப் பதிவு செய்து (VAT) இலக்கத்தினைப் பெற்றுக்கொண்டதும், இலங்கை தேசிய நிர்மானிகள் ஒப்பந்தக்காரர்களும் நிறுவனங்களும், சங்கங்களும் மட்டுமே கேள்வி கோரமுடியும்.

இது சம்பந்தமான விபரங்களை அலுவலக நேரத்தில் செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்விப் பத்திரங்கள் 2006.05.29 நண்பகல் 12 மணி வரை கிளி/மாவட்ட செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவு நாள் 2006.05.30 நண்பகல் 12 மணிவரை ஆகும். 2006.06.07ஆம் திகதி புதன் காலை 11.30 மணிக்கு கேள்விச் சபை கூடி ஆராய்ந்து முடிவு செய்யும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

[4473]

# கடல் நடவடிக்கை உரிமை அரசுக்கு மட்டுமே உள்ளது

## அமைச்சர் ரம்புக்வெல



கொழும்பு —

கடற்பிராந்திய உரிமையானது-அரசாங்கத்துக்கு மட்டுமே உண்டு என்று அமைச்சர் கெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளதாவது -

அமைதி முயற்சிகளிலிருந்து வெளியேறுவதில்லை என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. இருப்பினும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கமானது-நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது அதனது கடமை. அந்தப் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ள முடியாது.

கடற்பிராந்திய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்துக்கு மட்டுமே அதிகாரம் உள்ளதாக போர் நிறுத்த ஒப்பந்தம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கம் முகம் கொடுத்திருக்கும் இப்பிரச்சனைகளைப் பாரதூரமாகச் சர்வதேச சமுகமும் இணைத் தலைமை நாடுகளும் அவதானிக்க வேண்டும்.

கடந்த நான்காண்டு கால புலிகளின் போர் நிறுத்த மீறல்களுக்கு அப்பால் அரசாங்கம் அமைதியை உருவாக்கவே தொடர்ந்து முயற்சிக்கிறது. அரசாங்கத்தால் எந்த அளவுக்கு செய்ய முடியுமோ அந்தளவுக்கு செய்துள்ளது.

கிழக்கு மாகாணத்திலிருந்து கிளிநொச்சிக்குப் புலிகளின் தளபதிகள் பயணம் மேற்கொள்வதற்காக முன்வைக்கப்படும் ஒவ்வொரு கோரிக்கைக்கும் அரசாங்கம் இயன்ற வரை உரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

சர்வதேச வரலாற்றை நாம் பார்த்தால் இத்தகைய நிகழ்வுகள் முன்னரும் நடந்திருக்கின்றன.

தென்னாபிரிக்காவில் பேச்சுக்களிலிருந்து 17 முறை அந்த நாட்டுத் தரப்பினர் வெளியேறியிருக்கின்றனர். ஆனால், அமைதி முயற்சிகளில் அவர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர் என அவர் தெரிவித்தார்.

# இலங்கை விவகாரத்தில் தலையிட இந்தியா ஆர்வம் காட்டவில்லை!

## புதுடெல்கி தகவல்கள் தெரிவிப்பு

புதுடெல்கி —

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்று ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி கோரிக்கை விடுத்த போதும் -

இந்தியா இந்த விடயத்தில் ஆர்வம் காட்டவில்லை என்று பத்திரிகைத் தகவல்கள் தெரிவித்தன. இலங்கையின் சமாதான முயற்சிக்கு இந்தியா அதிக பங்களிப்பை வழங்க வேண்டுமென இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி கோரியிருந்தார்.

புதுடெல்கியில் இந்தியத் தலைவர்களைச் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து விளக்கிக் கூறியதுடன் - டோக்கியோவில் நடைபெறவிருக்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்துக்குப் புதுடெல்கி போதியளவு பங்களிப்பு வழங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சியாம் சரண், பாதுகாப்பு ஆலோசகர் கே.நாராயணன் ஆகியோரைச் சந்தித்து அகாஷி பேச்சுவார்த்தை நடத்தினார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளிலும், இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்திலும் இந்தியா கூடிய பங்களிப்பை வழங்க வேண்டுமென அகாஷி இந்தியத் தலைவர்களிடம் கோரியிருப்பதாக இந்தியத் தகவல்கள் தெரிவித்தன.

ஆனால், இதற்கு இந்தியா ஆர்வம் காட்டவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (01)

# பேச்சுக்கள் தொடங்காவிட்டால் யுத்தம் தவிர்க்கமுடியாததாம்

## என்கிறது ஐ.தே.கட்சி

கொழும்பு —

அமைதிப் பேச்சுக்கள் தொடங்காவிட்டால் யுத்தம் தவிர்க்க இயலாதது என்று ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளதாவது -

கடற்படையினர் மீதான புலிகளின் தாக்குதலானது - பாரிய யுத்த நிறுத்த ஒப்பந்த மீறலாகும்.

இது அமைதி முயற்சியில் புலிகளுக்கு ஈடுபாடில்லை என்பதை வெளிப்படுத்துகிறது. இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டனம் செய் கிறோம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகள் கடைப்பிடிக்க சர்வதேச சமுகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

வன்முறைகளை நிறுத்திப் பேச்சுக்களுக்குத் திரும்பப் புலிகளை வலியுறுத்த வேண்டும்.

அமைதியை உருவாக்குவது ஒவ்வொருவரது பொறுப்பு. இந்தச் சிக்கலான நேரத்தில் அனைவரும் ஒருங்கிணைந்து, அமைதி வழித் தீர்வை உருவாக்க முன்வரவேண்டும் எனத் தெரிவித்தார்.

# ஜனாதிபதி மாளிகைமுன் கட்டடத்தை விலைக்கு வாங்கியுள்ள தமிழ் எம்.பி.

கொழும்பு —

கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலுள்ள நீண்ட காலமாக விற்பனை செய்யமுடியாமலிருந்த கட்டடமொன்று, அதன் மதிப்பீட்டுப் பெறுமதிய விடக் கூடுதலான விலைக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வாங்கியது தொடர்பாக புலனாய்வப் பிரிவு தனது கவனத்தைத் திருப்பியுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஐ.தே.கட்சியின் உறுப்பினரான இந்தத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்பதால், இவர் அந்தக் கட்டடத்தை வாங்கியுள்ளமை ஜனாதிபதியின் பாதுகாப்புக்குப் பாரிய அச்சுறுத்தலாக அமையலாமென புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்தில் ஏதாவது சொத்தை வாங்கும்போதும் அல்லது விற்பனை செய்யும்போதும் படைத் தரப்பின் அனுமதி தேவை. மேற்படிக் கட்டடத்தைத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் வாங்குவற்கு இராணுவ கேணல் தர அதிகாரி அனுமதி வழங்கியுள்ளார்.

இவர் எவருடைய அங்கீகாரத்தின் கீழ் இந்த அனுமதியை வழங்கியுள்ளார் என்பது குறித்து புலனாய்வுப் பிரிவுத் தகவல்களை ஆராய்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த விசாரணை நடவடிக்கைகள் முடிவடைந்து, உயர்வலய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்வரை ஜனாதிபதி அலரி மாளிகையிலிருந்து, ஜனாதிபதி மாளிகைக்கு குடியிருக்க செல்லமாட்டாரெனவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# ஹன்சன் பௌயருடன் பாலித கொகன்ன பேச்சு





கொழும்பு —

இலங்கைக்கான நோர்வே விசேட தூதுவர் ஹன்சன் பௌயரை ஸ்பெயின் நாட்டில் அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்ன சந்தித்துப் பேசினார்.

பார்சிலோனாவுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பாலித கொகன்ன பயணம் மேற்கொண்டார்.

நோர்வே சிறப்புத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் மற்றும் அமைதி முயற்சிகளில் தொடர்புடைய அதிகாரிகளைச் சந்திப்பதற்காக அவர் சென்றிருந்தார்.

ஹன்சன் பௌயருடனான சந்திப்பில் இலங்கை அமைதி முயற்சிகளின் எதிர்காலம் மற்றும் தற்போதைய சிக்கல்களுக்கான தீர்வு குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தமாத இறுதியில் டோக்கியோவில் நடைபெறவுள்ள இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் தொடர்பாகவும் இருவரும் விவாதித்துள்ளனர்.

# இரண்டு கால் விலங்குகளிடமிருந்து சிங்களவர்களை பாதுகாக்க வேண்டும்

## என்கிறார் பொலிஸ் மா அதிபர்



கொழும்பு —

எல்லையோர சிங்கள கிராம மக்களை முன்னர் நான்கு கால் விலங்குகளிடமிருந்து பாதுகாத்தோம் - இப்போது இரண்டு கால் விலங்குகளிடமிருந்தும் காப்பாற்ற வேண்டியுள்ளது என்று பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கூறியுள்ளார்.

எல்லையோர சிங்கள கிராமங்கள் மற்றும் குடியேற்ற சிங்களப் பகுதி மக்களுக்கான பொலிஸாரது ஆயுதப் பயிற்சி குறித்து கொழும்பு பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அலி ஒலுவ - திருகோணமலை இந்தச் சிங்கள கிராமத்தினருக்குப் பொலிஸார் துப்பாக்கி சுடும் பயிற்சி அளித்து வருகின்றனர்.

"எனது குடும்பத்தைப் பாதுகாக்கவே ஆயுதம் எடுத்துள்ளேன்" என்கிறார் பயிற்சி எடுக்கும் குமார என்பவர்.

தமிழர் வசிக்கும் கிராமம் ஒன்றிலிருந்து சிறிது தொலைவிலுள்ள அடர்ந்த வனப்பகுதியில் தனது மனைவி மற்றும் இரு குழந்தைகளுடன் அவர் வசித்து வருகிறார்.

ஒரு காலத்தில் யானைகளின் அச்சுறுத்தலால் அலி ஒலுவ என்ற பெயர் வைக்கப்பட்டிருந்தது. இப்போது வேறு ஒரு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இத்தகைய ஆயுதங்கள் இப்போது மட்டும் வழங்கப்படவில்லை.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தைத் தொடர்ந்து 1985 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் சிறப்பு சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது. அதனடிப்படையில் ஊர்காவல் படை உருவாக்கப்பட்டது.

அதன் பின்னரான ஆண்டுகளில் சிங்கள எல்லையோர கிராமங்களுக்கு ஆயுதங்கள் விநியோகிக்கப்படவில்லை தற்போது நிலைமைகள் மாறியுள்ளன.

இருவாரங்களுக்கு முன்னதாக கிழக்குப் பிரதேச பொலிஸார் மூலமாக ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டன. சேருநுவரப் பகுதியில் 210 துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. கொழும்பிலிருந்து மேலதிகமாக 800 துப்பாக்கிகள் கிழக்குப் பிரதேசத்துக்கு அனுப்பிவைக்கப்பட உள்ளது.

கிராம தொடர்வலைப் பின்னல் அமைப்பு ஒன்றையும் படைகள் உருவாக்குகின்றனர். பொதுமக்கள் தங்களது விவசாய செயற்பாடுகளின் போதும், இதர நேரங்களின் போதும் பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதங்கள் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் அண்மைக்காலமாக ஆயுதங்கள் வழங்கப்பட்டமை தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார்.

எல்லையோரக் கிராமங்களில் பொலிஸாரது நிலைகள் அதிகப்படுத்தப்பட்டுள்ளன. ஊர்காவல் படையினரது எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நான்கு கால் விலங்குகளிலிருந்து முன்னர் கிராம மக்களை பாதுகாக்க வேண்டியிருந்தது. இப்போது இரண்டு கால் விலங்குகளிடமிருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டியுள்ளது என்றும் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

எல்லையோர தமிழ்க் கிராமங்களுக்கு ஏன் ஆயுதங்கள் வழங்கப்படவில்லை என்ற கேள்விக்கு -

சில பகுதிகளுக்கு மேலதிக படையினர் அனுப்பிவைக்கபட்டுள்ளனர். இருப்பினும் தமிழ்க் கிராம மக்களுடன் விடுதலைப் புலிகள் இணைந்திருப்பதால், அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்குவது ஆபத்தானது.

அந்த ஆயுதங்கள் பயங்கரவாதிகளுக்குச் சென்றுவிடும். தமிழ் மக்களைப் பாதுகாப்பதாகக் கூறிக் கொண்டு சிங்களக் கிராமங்களை விடுதலைப் புலிகள் தாக்குகின்றனர் என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அனுபவம் மிக்க அதிகாரியை கடற்படை இழந்துள்ளது!

கொழும்பு —

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்ட டோறா படகின் கட்டளை அதிகாரியான லெப்.கொமாண்டர் எதிரிசிங்க கடற்படையில் அனுபவம் மிக்க அதிகாரி எனத் தெரிவிக்கப்படுகிறது.

பி 418 இலக்க டோறாவின் கட்டளை அதிகாரியான இவருடன் சப் லெப்டினன்ட் ரத்னாயக்கவும் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் பி 418 டோறா செயலிழந்து பின்னர் மூழ்கடிக்கப்பட்டது.

இதன் கட்டளை அதிகாரியான லெப்.கொமாண்டர் எதிரிசிங்க - 1983 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடற்படையில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கடந்த 20 வருடங்களாகக் கடல் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுவந்தவர்.

ஆனையிறவு, வெற்றிலைக்கேணி, பூநகரி கடற்படைத் தளங்களில் கடமையாற்றியவர்.

இந்தியக் கடற்படையினருடன் சிறப்பு கடற்பயிற்சியில் ஈடுபட்டு, சுமார் 180 அடி ஆழத்துக்கு நீச்சல் பயிற்சி பெற்றவர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 13 ஆம் திகதிக் காலப்பகுதியில் பிரித்தானியாவில் லிவர்பூல் பகுதியில் விசேட கடற்படைப் பயிற்சியையும் முடித்துக்கொண்டவர் எனத் தெரியவருகிறது.

அதேவேளை, இந்த கடற்சண்டையில் கடற்படையின் பி 418, பி 420, பி 421, பி 497 இலக்க அதிவேக தாக்குதல் படகுகள் பங்கு பற்றியதாகவும் -

இவற்றில் பி 418 மூழ்கடிக்கப்பட்டதுடன், பி 421 கலத்தின் ஒரு பகுதி பலத்த சேதமடைந்தது. பி 497 படகு சிறு சேதமடைந்ததுடன், இரு கடற்படையினரும் காயமடைந்தனர் எனக் கடற்படைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தில் மூழ்கிய டோறாவில் இருந்தவர் இராணுவத்தின் தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டாளர் சார்ஜன்ட் திஸ்ஸ அபயக்கோன் என இனங்காணப்பட்டுள்ளார்.

இதுவரை 8 படையினரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது.

# தமிழரின் படை பலத்தினாலேயே சமாதானம் பேச வருகின்றனர்!

## சமாதான செயலகத்தை சேர்ந்த இளந்திரையன்



வட்டக்கச்சி

1983 ஆம் ஆண்டு தமிழர்கள் சிங்கள அரச படைகளாலும், காடையர்களாலும் பெரும் எண்ணிக்கையில் கொன்று குவிக்கப்பட்டபோதும், எவராவது தமிழர் தரப்புடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வந்தார்களா? ஆனால், தற்போது தமிழர்களிடம் படைப்பலம் இருக்கின்றது என்ற காரணத்தால் தான் சமாதானப் பேச்சுக்கு வருகிறார்கள்.

எனவே, நாம் எமது படைப் பலத்தை மேலும் பலப்படுத்த வேண்டும்மென புலிகளின் சமாதான செயலகத்தைச் சேர்ந்த இளந்திரையன் தெரிவித்தார்.

மகளிர் கலை பண்பாட்டுக் கழகத்தால் வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் ''விடுதலை ராகங்கள்'' இசை நிகழ்வு நடத்தப்பட்டு வருகிறது. மகளிர் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் வசந்தியின் ஒழுங்கமைப்பில் வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் பரவலாக இடம் பெற்று வரும் இசை நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி மாலை 7.30 மணியளவில் கிளிநொச்சி அரச செயலகத்துக்கு முன்பாக தமிழீழ வானொலி அறிவிப்பாளர் தி.திருமாறன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போது விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தைச் சேர்ந்த இளந்திரையன் மேலும் தெரிவித்துள்ளதாவது -

தமிழர்களுக்கு ஒரு படைப்பலம் இருக்கிறது என்பதை உணர்ந்து தான் எம்முடன் பேச்சுக்கு வருகிறார்கள். எம்மிடம் சகல வழிகளிலும் படைப்பலம் இருக்கிறது. எமது படைப்பலத்தை அனைவரும் சேர்ந்து பலப்படுத்த வேண்டும். இன்றைய சூழலில் எமது பலத்தைக் கண்டு எதிரி அஞ்சுகிறான். நாம் பொறுமை காத்து நிற்கிறோம். பேச்சுவார்த்தையை முற்றாக ஏற்றுக் கொள்கிறோம்.

எமக்கென்று ஒரு சரியான தலைமை இருக்கின்றது. இதன் மூலம் நாம் எதனையும் சாதிக்க முடியும். எதிரி தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மக்களைத் தனித்தனியாகவும், கூட்டாகவும் - வெட்டியும், சுட்டும் கொலை செய்கின்றனர். பச்சிளம் பாலகர்கள் வயது வேறுபாடின்றி கொல்லப்படுகின்றனர். இதனை எவ்வளவு காலம் பொறுத்துக் கொண்டிருப்பது?

எதிரியின் அக்கிரமங்களைத் தடுக்கவும், எம்மைப் பாதுகாக்கவும் இன்று தாயகப் பகுதிகளில் மக்கள் தயாராகிப் பயிற்சி பெறுகின்றனர். எல்லோரும் பயிற்சி பெற்று தாய் மண்ணைப் பாதுகாத்து வாழ வேண்டியதன் அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. நாங்கள் நின்று கொண்டிருக்கும் இந்த மண்ணை எத்தனை மாவீரர்களின் குருதி சிந்தி மீட்டோம். எமது மண்ணை மீட்பதும், மக்களைப் பாதுகாப்பதும் எங்களுடைய கடமை.

எங்களுடைய தாயகம் சகல வளங்களுமு நிறைந்தது. நாம் வெறும் சுடுகாட்டை மீட்கவில்லை. வரண்ட மண்ணுக்காக சண்டை பிடிக்கவில்லை. எமது அழகான, வளமான தாயகத்தைத்தான் எதிரியிடமிருந்து மீட்கப் போகின்றோம்.

பேச்சுவார்த்தையின் சூழ்ச்சிகளை எல்லாம் நாங்கள் நன்கு அறிந்துள்ளோம். எதிரி குண்டு போடுவான். ஒரு பக்கம் பேச்சு நடக்கும். இதை நம்ப வேண்டாம். எமது படைபலத்தைக் கண்டுதான் வெளிநாட்டவர்கள் கூட எம்முடன் பேச்சுக்காக வருகின்றனர். இதை நன்கு அனைவரும் உணர வேண்டும்.

1983 ஆம் ஆண்டு எந்த நாட்டில் இருந்து எம்முடன் பேச்சுக்காக வந்தார்கள்? தமிழர் தாயகத்தில் எமது படைப்பலத்தைக் கண்டு இப்போது ஓடி வருகின்றனர். எதற்காக ஓடி வருகின்றார்கள். தமிழர் கழுத்தில் கை வைத்தால் சிங்களவர்கள் மடியில் குண்டு வெடிக்கும் என்று தெரியும். இதனால் தான் எம்மிடம் ஓடி வருகின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (09)

## விவசாய விலங்கு வேளாண்மை அபிவிருத்தி கலந்துரையாடல்!

முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தின் விவசாய அபிவிருத்தி மற்றும் விலங்கு வேளாண்மை அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல் ஒட்டுசுட்டானிலுள்ள முல்லைத்தீவு மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சங்கர், நிறுவனத்தின் மாவட்டத் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா, விவசாயத் திணைக்கள மாவட்ட உதவிப் பணிப்பாளர் இ.கோகுலதாசன் உட்பட பல முக்கியஸ்தர்களும் இந்தக் கலந்துரையாடலில் பங்குகொண்டனர்.

மாவட்டத்தின் இந்த ஆண்டுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

## கொதித்தாறிய நீரைப் பருகவும்

கிளிநொச்சி

கிளிநொச்சி நகர பொது நீர் விநி யோக நீரை ஆய்வுக்குட்படுத்திய போது அது உடன் குடிநீராகப் பயன்படுத்த உகந்ததல்ல என்பது கண்டறியப் பட்டுள்ளது.

எனவே, இந்த நீரைக் குடிநீராகப் பயன்படுத்துபவர்கள் கட்டாயம் கொதிக்க வைத்து ஆறிய நீரையே பயன்படுத்துமாறு தமிழீழ சுகாதார சேவைகள் - தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

## அம்புலன்ஸ் வண்டி பழுது!


கிளிநொச்சி

பூநகரி - வேரவில் வைத்தியசாலையிலிருந்த அம்புலன்ஸ் வண்டி பழுதடைந்ததால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த அம்புலன்ஸ் வாகனம் பழுதடைந்ததையடுத்து, அதனைத் திருத்துவதற்கென கிளிநொச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு 20 நாட்கள் ஆகின்ற போதிலும் இதுவரை அது வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படவில்லை.

இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன், மேலதிக சிகிச்சை தேவைப்படும் நோயாளர்களை கிளிநொச்சி அல்லது யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 3 நாள் வதிவிட பயிற்சிநெறி!






கிளிநொச்சி

கிளிநொச்சி முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனத்தினரால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான 03 நாள் வதிவிடப்பயிற்சி நெறியும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

கடந்த 11 ஆம் திகதி முதல் கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் இந்த மூன்று நாள் பயிற்சி செயலமர்வு நடைபெற்றது. இறுதி நாளான நேற்றுமுன்தினம் வரை கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் ச.ரஜனி தலைமையில் நடைபெற்றது.

மூன்று நாள் செயலமர்வில் கலந்துகொண்ட 30 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்தச் செயலமர்வு உலக தரிசனம் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நடத்தப்பட்டுள்ளது.

## பூச்சி தாக்கத்தால் புகையிலை செய்கை வீழ்ச்சி

வவுனியா

வவுனியாவில் கடந்த பத்தாண்டுகளாக புகையிலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த முறை ஒருவகை பூச்சி இனத்தின் தாக்கத்தால் புகையிலைகளின் வளர்ச்சி குன்றியுள்ளதுடன், புகையிலைச் செய்கையிலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தின் மகாஇறம்பைக்குளம், தவசிகுளம், கோவில்குளம், ஆசிகுளம், நெலுக்குளம், இராசேந்திரகுளம் ஆகிய கிராமங்கள் பெருமளவில் புகையிலை செய்யப்படும் பிரதேசங்களாகும். இந்த முறை 110 ஏக்கரில் புகையிலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்.

## வவுனியா ரெலோ அலுவலகத்தினுள் அத்துமீறி நுழைந்த இராணுவத்தினர் கட்சி உறுப்பினர்களைத் தாக்கினர்!

மன்னார்

வவுனியா முதலியார் குளத்தில் அமைந்துள்ள ரெலோ கட்சியின் அலுவலகத்துக்குள் நேற்றுமுன்தினம் பகல் ஒரு மணியளவில் அத்துமீறி நுழைந்த இராணுவத்தினர் அங்கிருந்த கட்சி உறுப்பினர்களை மோசமாகத் தாக்கினர்.

நேற்றுமுன்தினம் பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ரவி, சின்னராசா, சுகந்தன், எட்வின், ராஜீ ஆகிய ரெலோ கட்சி உறுப்பினர்கள் காயமடைந்தனர்.

இராணுவத்தினரின் இந்த அத்துமீறிய சம்பவம் தொடர்பாக ரெலோவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் - செட்டிக்குளம் இராணுவ கட்டளைத் தளபதியுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அவரது கவனத்துக்கு கொண்டு வந்தார்.

அத்துடன் இது தொடர்பாக அவருடன் தான் நேரடியாக சந்தித்து கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(மோ)

## நோய்க் காவிகளை கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்க கோரிக்கை

கிளிநொச்சி

தமிழீழ சுகாதார சேவைகளின் பூச்சியியல் விசேட நடவடிக்கைப் பிரிவினரால் பரவலாக விசேட நடவடிக்கைப் பூச்சியியல் செய்ற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே வர்த்தகர்கள், பொதுமக்கள் அனைவரும் தங்கள் நிலையங்கள் வீடுகளுக்கு அண்மித்து நுளம்பு உற்பத்தியாகும், நீர் தேக்க நிலைகள், இலையான் உற்பத்தியாகும் கழிவுகள் என்பவற்றை இல்லாதொழித்து, நோய்க்காவிகள் பெருக்கமடையும் இடங்களைக் கட்டுப்படுத்த பூரண ஒத்துழைப்பு வழங்குவதுடன்-

தற்போது மழை சிறியளவில் பெய்து முடிவடைந்தமையால் வெற்று ரின்கள், வெற்றுப் பாத்திரங்கள், ரயர்கள், கோம்பைகள், பூச்சாடிகள் ஆகியவற்றில் தேங்கும் நீரில் டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்பு பெருக்கமடைவதற்கான சாதக நிலை இருப்பதால், இவ்வாறு நீர் தேங்கும் இடங்களை சூழலிருந்து அழித்துப் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுவதாகத் தமிழீழ சுகாதார சேவை தெரிவித்துள்ளது.

## உரவிலை நிர்ணயம்

கிளிநொச்சி

சீ.ஐ.சீ, ஹேலீஸ் உர நிறுவனங்களால் ஆக்கப்பெறும் கீழ்வரும் உரங்களின் வற்பனை விலை பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே இன்று தொடக்கம் இந்த விலைகளில் விற்பனை செய்யுமாறும் விடுதலைப் புலிகளின் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர் தெரிவித்தனர்.

| உரத்தின் பெயர் | ஆக்க நிறுவனத்தின் பெயர் | விற்பனைவிலை | |
|---|---|---|---|
| | | வன்னிப்பகுதி | யாழ்.மாவட்டம் |
| யூரியா (50 கிலோகிராம்) | சீ.ஐ.சீ | 1995.00 | 2016.00 |
| | ஹேலிஸ் | 1995.00 | 2016.00 |
| அமோனியா (50 கிலோகிராம்) | சீ.ஐ.சீ | 1486.00 | 1507.00 |
| | ஹேலிஸ் | 1391.00 | 1412.00 |
| வி 1 (50 கிலோகிராம்) | சீ.ஐ.சீ | 1785.00 | 1806.00 |
| | ஹேலிஸ் | 1785.00 | 1806.00 |
| ரீ.எஸ்.பி (50 கிலோகிராம்) | சீ.ஐ.சீ | 1627.50 | 1648.50 |
| | ஹேலிஸ் | 1628.00 | 1649..00 |
| ரீ.டி.எம் (50 கிலோகிராம்) | சீ.ஐ.சீ | 2074.00 | 2095.00 |
| | ஹேலிஸ் | 2074.00 | 2095.00 |
| எம்.ஓ.பி (50 கிலோகிராம்) | சீ.ஐ.சீ | 1706.25 | 1727.00 |
| | ஹேலிஸ் | 1806.00 | 1727.00 |

## வேளாண் நிலைய திறப்பும் விதை உள்ளீடு வழங்கலும்

கிளிநொச்சி

பசுமை வேளாண்மை நிலையத்தின் திறப்புவிழா நிகழ்வும், விவசாயிகளுக்கான விதை உள்ளீடுகள் மானிய விலையில் வழங்கும் நிகழ்வும் கடந்த மூன்றாம் திகதி மாலை மாங்குளம் ஒலுமடுவில் இடம்பெற்றது.

ஒலுமடு பிரதேச பொருண்மிய மேம்பாட்டு இணைப்பாளர் சதீஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை ஒலுமடு பிரதேச கமக்கார அமைப்புத் தலைவர் செ.பூபாலபிள்ளை ஏற்றிவைத்தார்.

வேளாண் சேவை நிலைய பெயர்ப்பலகையை வவுனியா மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ராம் திரைநீக்கம் செய்து வைக்க, நிலையத்துக்கான கட்டடத்தை விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ்ாப்பா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து இந்தப் பகுதி விவசாயிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக்கும், பயிர் உற்பத்தி ஊக்குவிப்புக்குமென தலா 5 ஆயிரம் ரூபா பணமும், ஒரு பயனாளிக்கு நல்லின கறவைமாடும் வழங்கப்பட்டது.

# அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டதால் 40 கணினிகள் 2000 புத்தகங்கள் அழிவு

## கண்காணிப்பு குழுவிடம் கஜேந்திரன் எம்.பி முறைப்பாடு



யாழ்ப்பாணம்—

இராணுவத்தினர் தனது அலுவலகத்தைத் தீக்கிரையாக்கியதால் 40 கணினிகள் மற்றும் 2 ஆயிரம் புத்தகங்களைத் தாம் இழந்துள்ளதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சனுக்கு அனுப்பியுள்ள முறைப்பாட்டில் யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

மே 13 ஆம் திகதி இராணுவத்தினர் யாழ்.பரமேஸ்வரா சந்தியில் உள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் அலுவலக வளாகத்தில் உள்ள எனது அலுவலகத்துக்குள் நுழைந்து கட்டடத்துக்கு தீ வைத்தனர்.

இதில் எவரும் படுகாயமடையவில்லை. எனினும் பல மில்லியன் ரூபா மதிப்பிலான சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. எனது அலுவலகத்தைச் சுற்றி நூற்றுக்கணக்கான படையினர் குவிக்கப்பட்டு இந்த வெறியாட்டம் நிகழ்த்தப்பட்டது. இதனை நேரில் பார்த்தவர்கள் மூலமாக உறுதிப்படுத்தியுள்ளேன்.

எனது அலுவலகம் மீதான இராணுவத்தினரின் 5 ஆவது தாக்குதல் இதுவாகும். இருப்பினும் இதுவரை பொலிஸார் இந்தத தாக்குதல்கள் தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

கடந்த ஏப்ரல் 26 ஆம் திகதி எனது அலுவலகத்துக்குள் நுழைந்த இராணுவத்தினர் தீ வைத்ததுடன் அங்கிருந்த மாணவர்களையும் தாக்கினர். அச்சத்தின் காரணமாக அந்த மாணவர்கள் இது தொடர்பாக முறைப்பாடு செய்யவில்லை. அந்தத் தாக்குதலில் எனது அலுவலக உதவியாளர் ஒருவர் மிகவும் மோசமாக படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

ஏப்ரல் 26ஆம் திகதி தாக்குதலின் போது நான் கொழும்பு சென்றுவிட்டேன். அன்றைய நாளில் தாக்குதல் நடத்திய படையினர், என்னை யாழ்ப்பாணத்துக்குள் உயிருடன் நுழைய விடமாட்டோம் என்றும் எச்சரித்துள்ளனர். நான் என் உயிர் குறித்த அச்சத்தில் இருக்கின்றேன்.

எனது அலுவலகம் அமைந்துள்ள அதே இடத்தில் சர்வதேச மாணவர் பேரவையின் அலுவலகமும் அமைந்துள்ளது. அண்மைக் காலமாக இராணுவத்தினரது அச்சுறுத்தலால் தங்களது அலுவலகத்தை மூடிவிட்டு அங்கிருந்த பொருட்களை எனது அலுவலகத்தில் வைத்திருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினராக நான் இருப்பதால் தங்களது பொருட்களுக்கு சிறிது பாதுகாப்பு இருக்கும் என்று அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

யாழ். மாணவர் சமூகத்துக்கு சர்வதேச மாணவர் அமைப்பினர் பாரிய சேவையாற்றியுள்ளனர். யாழ்.பல்லைக்கழக நூலகத்துக்கு, உயர்தர கல்வி மாணவர்களுக்காக 2 ஆயிரம் புத்தகங்களை வழங்கியுள்ளனர்.

எனது அலுவலகம் மீது மே 13 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலின் போது கணினிகளும் விலை உயர்ந்த பொருட்களும் இராணுவத்தினரால் திருடப்பட்டு விட்டன.

ஒரு மில்லியன் ரூபா மதிப்பிலான புத்தகங்கள் முழுமையாக தீக்கரையாக்கப்பட்டுள்ளன. 4 மில்லியன் ரூபா மதிப்பிலான 40 கணினிகளை இழந்துள்ளோம். அரை மில்லியன் ரூபாய் மதிப்பிலான அலுவலக உபகரணங்களும் எரிக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினரால் எரிக்கப்பட்ட எமது கட்டிடத்தின் சேத மதிப்பு 1 மில்லியன் ரூபாவாகும். மொத்தமாக 6.50 மில்லியன் ரூபா சேதத்தை இராணுவத்தினர் ஏற்படுத்தியுள்ளனர். அனைத்து அலுவலக ஆவணங்களும் எரிக்கப்பட்டு விட்டன.

உயர்கல்வி மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகளை சர்வதேச மாணவர் பேரவை நடத்தி வந்தது. மேலும் இலவச கணினி பயிற்சி வகுப்புக்களையும் சர்வதேச மாணவர் பேரவை நடத்தி வந்தது.

இராணுவத்தினரது கொலை அச்சுறுத்தல் மற்றும் பல மில்லியன் ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டமையால், எனது நாளாந்த பணிகளை நான் மேற்கொள்ளமுடியவில்லை.

எனவே எனது தனிப்பட்ட பாதுகாப்பை உறுதிசெய்யவும் இராணுவத்தினருக்கு எதிரான சட்டப்பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ளவும் உரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு தங்களை வேண்டுகிறேன் என்று அதில் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.


# யாழ்.பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்—

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி பிற்போடப்பட்டுள்ளதாக விளையாட்டுக் குழுவின் செயலாளர் க.குமாரசாமி அறிவித்துள்ளார்.

போட்டிகள் நடைபெறுவதற்கான புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் போட்டிகள் இந்த மாதம் 15,16 , 17 ஆம் திகதிகளில் நடைபெற இருந்தமை குறிப்பிடத்தக்கது.



பண்டத்தரிப்பு பற்றிமா அன்னையின் யாத்திரைதல திருவிழா நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் நடைபெற்ற போது யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுப்பதையும் பற்றிமா அன்னையின் திருச் சொரூப ஆசீர் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# வடகடல் நிறுவன ஊழியர்களுக்கு சம்பளம் வழங்காமை குறித்து முறையீடு

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டில் மீன்பிடி உபகரணங்களை உற்பத்தி செய்யும் வடகடல் நிறுவன ஊழியர்களுக்கு ஏப்ரல் மாத கொடுப்பனவு வழங்கப்படாமை குறித்து அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த வடகடல் நிறுவனமானது (சீநோர்) 2001 ஆம் ஆண்டு கைத்தொழில் அமைச்சால் பொறுப்பேற்கப்பட்டு அதன் கீழ் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. தற்போது இந்த நிறுவனத்தில் 92 பேர் கடமையாற்றி வருகின்றனர். இவர்களுக்கான ஏப்ரல் மாதக் கொடுப்பனவு வழங்கப்படாமையை அடுத்து நிறுவனத்தின் அபிவிருத்திச் சபைத் தலைவர் கிளபோடசியஸ் - அரச அதிபர் கே.கணேஷின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார். நிறுவனத்தை கைத்தொழில் அமைச்சு பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் அரச அதிபர் இதன் தலைவராக கடமையாற்றினார்.

குடாநாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக மூலப் பொருட்களை கொழும்பில் இருந்து இங்கு கொண்டு வருவதில் உள்ள தாமதத்தின் காரணமாக நிறுவனத்தின் உற்பத்திகள் வீழ்ச்சி அடைந்திருப்பதாகவும் அபிவிருத்தி சபைத் தலைவர் தெரிவித்தார்.

# வேகக் கட்டுப்பாட்டை பேணுமாறு கோரிக்கை

சாவகச்சேரி—

சாவகச்சேரி நகர வீதிகளில் வாகனங்கள் வேகக்கட்டுப்பாட்டை கடைப்பிடிக்காமல் செல்வதால் பொது மக்களும், பாதசாரிகளும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி நகரில் கண்டி வீதியில் இந்துக் கல்லூரிக்கும், நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை பேண அறிவுறுத்தப்பட்டிருந்த போதும் தற்போது இந்த வீதியில் வேகக்கட்டுப்பாடு பேணப்படுவதில்லை என பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நிலவும் அசாதாரண சூழலை அடுத்து பொலிஸார் வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடாததையடுத்து நகரப் பகுதியில் இவ்வாறு வேகக் கட்டுப்பாட்டைப் பேணாமல் வாகனங்கள் செல்கின்றன.

நகரில் சீர் குலைந்துள்ள போக்குவரத்து விதிகளை சீர் செய்து வீதிகளில் வேகக் கட்டுப்பாட்டைப் பேண நடவடிக்கை எடுக்குமாறு நகர வணிகர்கழகம் - சாவகச்சேரி பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# நெடுந்தீவில் சுற்றிவளைப்பு 15 இளைஞர்கள் கைது

நெடுந்தீவு—

நெடுந்தீவு சீக்கிரியாம் பள்ளம் பகுதி நேற்று முன்தினம் காலை கடற்படையினரால் திடீரென சுற்றி வளைக்கப்பட்டு மக்கள் முகமூடி அணிந்த நபரின் முன்பாக நிறுத்தப்பட்டதுடன் 15 இக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் சீக்கிரியாம் பள்ளம் கிராமத்தைப் பெருமளவு கடற்படையினரும், பொலிஸாரும் சுற்றிவளைத்து வீடு வீடாகச் சென்று சோதனையிட்டதுடன் - இளைஞர், யுவதிகள் அனைவரையும் சீக்கிரியாம் பள்ளம் பிரதான வீதியில் அமைந்துள்ள சனசமூக நிலையத்துக்கு அழைக்கப்பட்டு அங்கு முகமுடி அணிந்த நபரின் முன் நிறுத்தப்பட்டனர்.

சந்தேகத்துக்கிடமானவர்கள் தடுத்து வைக்கப்பட்டு, கடுமையாகத் தாக்கப்பட்டு, பிற்பகல் 3 மணியளவில் விடுவிக்கப்பட்டனர்.

நெடுந்தீவில் அரசியல் போராளிகளுடன் இணைந்து சமூகப் பணியில் ஈடுபட்ட இருவரின் புகைப்படங்களை வைத்து படையினர் அவர்கள் பற்றி விசாரித்ததாகவும் தெரியவருகிறது. (113)

# நெடுந்தீவில் மீட்கப்பட்ட சடலத்தை அடையாளம் காணக் கோரிக்கை

நெடுந்தீவு—

யாழ்.போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் கடந்த ஒரு வாரகாலமாக இனங் காண்பதற்காக வகையில் வைக்கப்பட்டுள்ள பெண்ணின் சடலத்தை உறவினர்கள் யாராவது அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு நெடுந்தீவு பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி நெடுந்தீவு தெற்கு கடற்பகுதியில் சுமார் 45 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரின் சடலம் கரையொதுங்கியது. அதை நெடுந்தீவு பொலிஸார் கண்டெடுத்து ஊர்காவற்துறை நீதிமன்ற உத்தரவின் பேரில் அடையாளம் காணும் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண் சிவப்பு நிறச் சேலை அணிந்திருந்ததுடன், பாசி மாலை ஒன்றும் கழுத்தில் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இன்னும் ஓரிரு தினங்களில் எவரும் உரிமை கோராது விட்டால் அந்தச் சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்ய வேண்டியநிலையேற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (113)

# உயர்தரப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

கொழும்பு—

எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உயர்தரப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாக பரீட்சைத் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.


இந்த முறை பரீட்சைக்கு 2 இலட்சத்து 45 ஆயிரத்து 886 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 47 ஆயிரத்து 808 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர்.

1811 பரீட்சை நிலையங்களிலும், 267 இணைப்பு நிலையங்களிலும் பரீட்சை நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் நடை பெற்ற பரீட்சையின் விடைத்தாள்திருத்தும் பணியில் ஏற்பட்ட தவறுகள் இந்த முறை இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பரீட்சை நிலையங்களுக்கான பாதுகாப்பு இந்த முறை பலப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# தமிழின போராட்ட வரலாற்றில் மறக்கமுடியாத துயரம் குமுதினி படுகொலை



நெடுந்தீவு மக்களது வாழ்க்கையிலும், தமிழின போராட்ட வரலாற்றிலும் என்றுமே அழிக்கமுடியாத ஒரு துயரச் சம்பவம் இடம்பெற்று இன்றுடன் 21 ஆண்டுகள் உருண்டோடிச் சென்றுள்ளன.

கடற்பரப்பிலே வைத்து மிலேச்சத்தனமான முறையில் ஒன்றுமறியாத அப்பாவிப் பொதுமக்கள் சுமார் முப்பத்தைந்து பேர் வெட்டியும், அடித்தும், சுட்டும் படுகொலை செய்யப்பட்டதும், படுகாயப்படுத்தப்பட்டதுமான வரலாற்று வடுவைச் சுமந்து இன்றும் தனது சேவையை "குமுதினி" படகு தொடர்ந்து செய்து வருகிறது.

15.05.1985 அன்றையதினம் காலை எதுவுமே அறியாமல் வழமை போன்று தமது பயணங்களை தொடர்ந்த அப்பாவி மக்களை நடுக் கடலில் வைத்து வழிமறித்த சிவில் உடையில் வந்தபடையினர் அனைத்து மக்களையும், பயணிகள் இருக்கை அறையொன்றில் ஒன்றாக விட்டு ஒவ்வொருவராக அழைத்து எதுவுமே அறியாத எத்தனையோ கனவுகளுடன் பயணித்த அப்பாவிகளை கோரத் தாண்டவம் ஆடி கொலை செய்த நினைவுகள் இன்றும் தீவக மக்களின் மத்தியில் அலை மோதியவாறேயுள்ளது.

இத்தனைக்கும் மேலாக சுமைகளைத் தங்கிய குமுதினிப்படகும், படகின் மடியிலே உயிர்களை நீத்த அப்பாவிகளை நினைவு கூரும் வகையில் மாவிலித்துறைமுகப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியும் நாளாந்தம் குமுதினிப் படுகொலையை மக்கள் மத்தியில் இருந்து அகன்றுவிடாமல் நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும்.

இதேவேளை இந்தத் துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள நினைவு மண்டபத்தை இன்று கடற்படையினரும், பொலிஸாரும் தங்களது மினி முகாம் போல அமைத்து அங்கே தங்கியுள்ளமை இன்று மக்கள் மத்தியில் பெரும் நெருக்கடியையும், மன உளைச்சலையும் உண்டுபண்ணியுள்ளது. நினைவு மண்டபப்பகுதியை மூடி அடைத்து தூபியுடன் சேர்த்து மண்மூடைகளை அடுக்கி படைக் காவலரண்போல தற்போது காட்சியளிப்பதுடன் அதனைச் சூழவுள்ள வளாகத்தின் வேலிகளின் மூலைகளிலும் மண்மூடைகள் அடுக்கப்பட்டு, காவலரண்கள் அமைக்கப்பட்டு தினமும் அந்தப் பகுதியில் பல கடற்படையினர் நடமாடும் செயல் என்றுமே தாங்கிக் கொள்ள முடியாததொன்றாகும்.

இனவெறிக் கொலையால் கொல்லப்பட்டவர்களது பெயரால் அமைக்கப்பட்டு அவர்களது நினைவுகள் என்றுமே அறியாது போதிக்கப்பட வேண்டிய நினைவாலயம் இன்று இனப்படுகொலைதாரிகளது கூடாரமாக இருப்பது வேதனைக்குரியதாகும்.

குமுதினிப் படுகொலையின் போது காயங்களுடன் தப்பி இன்று வாழ்பவர்களும், தங்களது எட்டு மாத குழந்தை முதல் தள்ளாடும் பாட்டன் வரை பறிகொடுத்த உறவுகளும் இன்று இந்த நிலைகண்டு மனதுள்ளே எரிமலையாய் குமுறியிருக்கும் நிலைதான் - பொங்கியெழும் காலம் வரும் என குமுறும் உள்ளங்கள்.

இத்தனைக்கும் மேலாக இந்தக் குமுதினிப்படகு படுகொலையானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியதுடன், விடுதலைப்போரில் தம்மை பல இளைஞர், யுவதிகள் ஈடுபடுத்தும் அளவுக்கு ஒரு தூண்டுதலாக அமைந்ததாகவும் 18 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் உரை நிகழ்த்திய, அப்போது யாழ்.மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளராகவிருந்த செம்மணன் தெரிவித்திருந்தார்.

இந்த வகையில் தமிழீழ போராட்ட வரலாற்றிலே தடம் பதித்து - வலுச் சேர்த்து மடிந்த எமது தீவக மக்களுக்கு இன்றைய தினத்திலே கண்ணீரால் அஞ்சலிப்பதுடன், எதுவுமறியாமல் இறந்தவர்கள் நினைவால் இன்று நினைவாலயத்தில் மலர்தூவி அஞ்சலிப்போம்.

ஆழ்கடலில் குமுதினியாள்
அமுத கதை கூறவா
பூவுடல்கள் துடிதுடித்து
மறைந்த கதைகூறவா
நெஞ்சம் ஆறாதம்மா
நினைவுகள் அழியாதம்மா

- கண்ணன் -

## ஐயகோ ஆண்டுகள் 21 ஆனதே!

இரா.தர்மா
நெடுந்தீவு - 15

அலைபொங்கும் கடல் நடுவே
அமைந்த நெடுந்தீவில்
நீண்ட நிலப்பரப்பை நாடி
கடல் கடக்க உதயத்தில்
குமுதினியாள் சுமந்த வேளை
காவுகொள்ளக் காத்திருந்த
எதிரிப் படை நடுக்கடலில் குதறிய
செய்திதனை தென்றலது
காதோரம் உரசிச் செல்ல
கண்ணெதிரே கண்ட காட்சி
வலிக்கின்ற இதயத்தின்
துடிப்புக்கள் நிற்கும் முன்னே
தவிக்கின்றேன் செய்தி
இதைச் சொல்லிவிட
தவழுகின்ற மழலை முதல்
பொல்லூன்றும் கிழவர் வரை
குமுதினியில் குருதி சிந்திய நாள்.
ஐயகோ ஆண்டுகள்
இருபத்தொன்று
புயற்காற்றோ, கடும் மழைக்கோ
அஞ்சாத குமுதினியாள்
அன்றையநாள்
உயிரற்ற உடல்களோடு
கரைசேர்ந்தாள்.

தொடருகின்ற கோரத்தின்
கொடுமையிது.
துயரங்களோடு
கதறிக் கதறிக் கண்ணீர் விடு
கோழைகள் நாங்களல்ல
கரைதனிலே முட்டையிட்டு
ஆழ்கடலில்
நீந்துகின்ற ஆமைகள்
நாங்களல்ல
கற்பனையில் கதைபேசி
காலத்தை போக்குகின்ற
வீணரல்ல நாங்கள்
காலத்தின் கோலங்கள் கால்
மாறிப் போய்விடாது
ஞாலத்தில் நல்லவை நடந்திட
வீரத்தில் விளைந்த உயிர்கள்
நாம்
விரைவினில் அறிந்து
கொள்வீர்.




## நெடுந்தீவு படுகொலையின் 21 ஆவது ஆண்டு நினைவலைகள்...

1985 வைகாசி 15 அன்று நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து குமுதினிப் படகில் பயணித்த அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதன் நினைவாக...

மேவி... மேவி
உயிருடன் கரைசேர்க்கும் போதும்
வலைப்பின்னல்களில்
சிக்கும் உறவில்
கடலின் ஆழம் தெரியாது!

மேவி... மேவி
உயிரற்று கரைசேர்க்கும் போதும்
ஆயுத பின்னணியில்
தமிழ் உறவுகள் சிக்கும்
அந்நிய உறவின் ஆழம் தெரிகிறது!





நினைவுகளில் உயிர்ப்புடன்
நிகழ்வுகளாக இன்றும் இந்தக் கடல்
கொண்டு வரவும்
கொண்டு போகவுமா?

நின்று விளங்கிட
ஒருநாள்,
வரிசைப்படி கடல் ஏறி விளையாடும்
நாள் வரும், அது
இந்த நாள் நினைவுகளில்
உருவாகும்!

நெடுந்தீவு மக்கள்

[C/5327]

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்!
- திருக்குறள்.

## நமது நோக்கு

# இனப்படுகொலையின் உச்சம்!

தீவகத்தில் ஒரே இரவில் பதின்மூன்று அப்பாவிப் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கும் சம்பவம் தமிழ்மக்களைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.

நாளாந்தம் படுகொலைகள் தீவிரமடைந்து அதி உச்சமான நிலைக்குச் சென்றிருப்பதையே இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது. ஒரே இரவில் - இருவேறு இடங்களில் நடத்தப்பட்ட இந்த கொலைவெறித் தாக்குதல் ஒரு இனப்படுகொலையே அன்றி வேறில்லை.

குடாநாட்டை மரண பூமியாக்கக் கங்கணம் கட்டிச் செயற்படுவது இதன்மூலம் உறுதியாகியிருக்கின்றது. இந்தப் படுகொலைகளின் பின்னணி - அதுவும் எந்தவொரு தாக்குதல் சம்பவமும் இடம்பெறாத சூழலில் நடந்திருப்பது படைத்தரப்பின் மீதான சந்தேகங்களை மக்கள் மத்தியில் அதிகரிக்கச் செய்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் இரவு இராணுவப் பேச்சாளரும், கடற்படைத் தலைமையக அதிகாரியும் - தம்மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது பதில் தாக்குதல் நடத்தியதாகவும் இதில் நால்வர் பலியானதாகவும் கூறியிருந்தனர்.

ஆனால், நேற்றுக்காலை கடற்படைப் பேச்சாளரோ - தம்மீது தாக்குதல் நடத்தப்படவும் இல்லை. பதில் தாக்குதல் நடத்தப்படவும் இல்லை. முகாமுக்கு வெளியே ஏதோ வெடிச்சத்தம் மட்டும் கேட்டது. வேறெதுவும் தெரியாது என்று 'கதை' விட்டிருந்தார்.

முதல்நாள் இரவு தாக்குதல் - பதில் தாக்குதல் என்று விட்டு அடுத்த நாள் அப்படி எதுவும் நடக்கவில்லையே என்று கூறி மழுப்புவதில் இருந்தே படைத்தரப்புக்கும் இந்தச் சம்பவத்துக்கும் இருக்கும் தொடர்பு வெளிப்படையாகியிருக்கிறது.

கணவன் - மனைவி, இரண்டு பச்சிளம் பாலகன்களோடு படுக்கையில் வைத்து கொல்லப்பட்ட கொடூரமும், முதியவர்களும் கூட கோரமாகக் கொல்லப்பட்ட விதமும் இனப்படுகொலைகளின் உச்சத்தை குடாநாடு சந்தித்துக் கொண்டிருப்பதை வெளிப்படுத்துகிறது.

நான்கு மாத, நான்கு வயது குழந்தைகளின் படுகொலைகளுக்கு எந்தக் காரணமும் கூறமுடியாதென்பதால்தான் சம்பந்தப்பட்ட தரப்பு தாம் ஒன்றும் சம்பந்தப்படாதது போல ஒதுங்கிக்கொள்ள முற்படுகிறது.

ஆனால், இந்தப் பசப்பு வார்த்தைகளை - பொய்ப் பிரசாரங்களை சர்வதேச சமூகம் வேண்டுமானால் நம்பிவிடலாம். ஆனால், தமிழ்மக்கள் இப்படிப்பட்ட எத்தனையோ இனவெறித் தாக்குதல்களைச் சந்தித்தவர்கள். அவர்களுக்கு உண்மை தெளிவாகவே தெரியும்.

அதுபோக - குடாநாட்டில் இனப்படுகொலை தீவிரமாக நடந்துகொண்டிருக்கும் நிலையில் சர்வதேச சமூகமோ அல்லது இலங்கையின் நலனில் அக்கறை கொண்ட சக்திகளோ ஏன் மௌனமாக இருக்கின்றன?

சிறுவர்கள் படைக்குத் திரட்டப்படுவதாக வாய்கிழியக் கத்திய அமைப்புக்கள், நிறுவனங்கள் எல்லாம் பச்சைப் பாலகர்களின் படுகொலைகள் நடக்கின்றபோது வாய்மூடி மௌனியாக இருப்பது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

இலங்கை அரசு தமிழ்மக்களை கொன்றொழிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிவிட்டது. அதனை இந்த இனப்படுகொலைகள் தெளிவாகவே எடுத்துக் காட்டுகின்றன.தீவகத்தில் கடைகள் பெருமளவு தீக்கிரையாக்கப்பட்டது - மீண்டும் தமிழ்மக்கள் மீது 1983 ஜுலை கலவரம் திணிக்கப்படுவதற்கான ஒரு முன் சமிக்ஞையாகக் கூட எடுத்துக்கொள்ளலாம்.

இந்தச் சூழலில் தமிழின அழிப்பைத் தடுத்து நிறுத்து வதற்கு சர்வதேச சமூகம் முன்வரத் தவறினால் - சமாதான நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடுவதற்கு அருகதை இல்லாமற்போய்விடும்.

வெறுமனே சமாதானம் என்ற வார்த்தைளை சொல்வதைவிட்டுவிட்டு - தமிழினத்தை அழிவில் இருந்து பாதுகாக்க அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவே இன்றைய அவசர தேவையாகும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்



# 710 கடற்படையினரைக் காப்பாற்ற

# விமான நடவடிக்கைக்கும் தயாரென இந்திய அதிகாரிகள் தெரிவித்தனராம்

கொழும்பு —

விடுதலைப் புலிகளின் சுற்றிவளைப்பில் சிக்கியிருந்த 710 கடற்படையினரைக் கொண்ட கப்பலைக் காப்பாற்ற - இந்திய கடற்படை மற்றும் வான்படை தயாராக இருந்தது என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்த பத்திரிகை தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

கடந்த வியாழக்கிழமை மாலை 3.30 மணியளவில் 710 படையினருடன் பயணித்த ''பேர்ள்குரூஸ்'' கப்பலுக்கு பாதுகாப்பாகச் சென்ற பி 418 என்ற டோராப் படகின் கட்டளைத் தளபதி பிரசன்ன எதிரிசிங்க, வடபகுதி கடற்படைத் தலைமையகத்துக்கு ஒரு தகவல் அனுப்பினார்.

சாலை கடற்பகுதியில் புலிகளின் தாக்குதல் படகுகள் எண்ணிக்கை அதிகரிப்பதாகவும், கடற்புலிகள் பாரிய தாக்குதல் நடவடிக்கைக்கு தயாராவதாகவும் தற்போது தெளிவாக தெரிகிறது என்று கூறியுள்ளார்.

''பேர்ள்குரூஸ்'' கப்பலில் விமானப் படை இராணுவம், கடற்படை மற்றும் பொலிஸைச் சேர்ந்த 710 பேர் இருந்தனர். தனியாருக்குச் சொந்தமான அந்தக் கப்பலை யாழ்.குடாநாட்டு பயணத்துக்கெனப் படைத்தரப்பினரால் குத்தகைக்கு எடுக்கப்பட்டது.

இரத்மலானையிலிருந்து பலாலிக்கு குறிப்பிட்ட அளவிலான படைத்தரப்பினரே விமானத்தில் பயணிக்க முடியும் என்பதால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக்கப்பலில் திருகோணலைக் கண்காணிப்புக் குழு உறுப்பினர் இல்க கப்லினாவும் இருந்தார்.

அதிவேகப் பீரங்கிப் படகும், இரு டோராத் தாக்குதல் படகுகளும் சென்று கொண்டிருந்தன. குறைந்தபட்சம் புலிகளின் 12 தாக்குதல் படகுகளில் 20 மி.மீ ரக துப்பாக்கிகள், 50 கலிபர் துப்பாக்கிகள் அல்லது அதிவேகத்தில் இயங்கக் கூடிய இலகு ரக துப்பாக்கிகளுடன் புலிகள் சூழ்ந்து கொண்டனர்.

மேலும் ஆயுதங்கள் நிரம்பிய 4 சிறிய படகுகளும் தற்கொலைப் படையினரது வழிகாட்டுதலுக்கு அமைய அந்தப் பகுதிக்கு வந்தன. நேரம் மாலை 4.35 மணி. 4 டோராப் படகுகள் சாலை நோக்கி நகர இரு தரப்புக்கும் மோதல் ஏற்பட்டது.

''பேர்ள்குரூஸ்'' பாதுகாப்புக்காக 3 கடற்படை கலங்கள் உசார் நிலையில் இருந்தன. அவை பருத்தித்துறையிலிருந்து 30 கடல்மைல் தொலைவில் நிறுத்தப்பட்டிருந்தன. பருத்தித்துறையின் தென்பகுதியில் வெற்றிலைக்கேணி வரையிலான பகுதியில் இருதரப்புக்கும் மோதல் நடந்தது.

கொழும்புக்கு இந்தத் தகவல் அனுப்பப்பட்டபோது பாதுகாப்பு மற்றும் படைத்தரப்பினர் அதிர்ச்சியடைந்தனர். இரு வாரங்களுக்கு முன்னதாக இராணுவத் தலைமையகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட 2 ஆவது தாக்குதல் இதுவாகும்.

தனது அலுவலகப் பணியில் இருந்த கடற்படை தளபதி வசந்த கரன்னகொட உடனே நடவடிக்கைகள் அறைக்கு வந்து பொறுப்பேற்றுக்கொண்டார். அப்போது பாதுகாப்பு ஆலோசகர் கோத்தபாய ராஜபக்ஷவும் அங்கு வந்து சேர்ந்தார்.

வெளிவிவகார அமைச்சக மாநாடு ஒன்றில் அவர் பங்கேற்றிருந்தார். அவரைத் தொடந்து ஜனாதிபதி மகிந்தவின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரும் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தனர்.

பதற்றம் அதிகரிக்க 90 நிமிட நேரம் கடற்சமர் நடந்தது. வானொலியூடாக வசந்த கரன்னகொட கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார். வடபகுதி கடற்படை தளபதி ரியர் அட்மிரல் உபாலி ரணவீர மற்றும் வடபகுதி தளபதி ஜயந்த பெரேராவுடன் அவர் உரையாடிக் கொண்டிருந்தார். மற்றொரு தளபதி எஸ்.ஆர்.சமரதுங்க விடுப்பில் சென்றிருந்தார்.

''பேர்ள்குரூஸ்'' கப்பல் மற்றும் இரு டோரா அதிவேகத் தாக்குதல் படகுகளுடன் ஆழ்கடல் பகுதிக்கு நகருமாறு கட்டளையிடப்பட்டது.

தீவகப் பகுதியிலும் இரு டோராப் படகுகள் உசார்நிலையில் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒரு கண்காணிப்புக் குழு உறுப்பினரும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்.

''பேர்ள்குரூஸ்'' கப்பல் சர்வதேச கடல் எல்லையைக் கடந்து இந்தியா மற்றும் இலங்கை எல்லைகளுக்கு இடையே நகர்ந்தது. இந்தியக் கடற்பிரதேசத்துக்குள் அந்தக் கப்பல் சென்றது.

இந்தியத் கடற்படையைத் தொடர்பு கொண்ட கொழும்பு, ''பேர்ள் குரூஸ்'' கப்பல் தாக்குதலுக்குள்ளாகும் நிலையில் பாதுகாப்பு அளிக்குமாறு கேட்டுக்கொண்டனர். அதற்குப் பதிலளித்த இந்திய அதிகாரிகளோ, கடற்படை பாதுகாப்பு மட்டுமல்ல, தேவைப்படுமாயின் விமான நடவடிக்கையையும் அளிக்கிறோம் என்று உறுதியளித்தனர் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சோதிட ஆலோசனைப்படி இலங்கை திரும்பும் சந்திரிகா

கொழும்பு —



லண்டனில் தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜூன் மாதம் இலங்கை திரும்பவுள்ளார். சோதிடர்களின் ஆலோசனைக்கு அமையவே அவர் இலங்கை திரும்பவுள்ளார்.

ஜூன் 15 ஆம் திகதிக்குப் பின் முன்னாள் ஜனாதிபதிக்கு நல்ல காலம் மீண்டும் ஏற்படவுள்ளதாக சோதிடர்கள் கூறியதாலேயே இவர் இலங்கைக்குத் திரும்பவுள்ளார்.

சோதிடர்களின் ஆலோசனைப்படியே சந்திரிகா லண்டனுக்குச் சென்றதாகவும், இலங்கை திரும்பியவுடன் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மீண்டும் போர் ஏற்பட்டால் நிதி உதவிகள் கிடைக்காது

## ஜே.வி.பிக்கு அகாஷி தெரிவிப்பு

கொழும்பு —



இலங்கையில் மீண்டும் போர் ஏற்பட்டால் சர்வதேச நிதி உதவிகள் நிறுத்தப்பட்டு விடும் என்று ஜே.வி.பியினரிடம் ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி தெரிவித்துள்ளார். ஜே.வி.பியின் தலைமையகத்தில் கடந்த வாரம் கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவைச் சந்தித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இறுதித் தீர்வு காணாமல் மீண்டும் போருக்குத் தள்ளுவதனால் இலங்கையின் அபிவிருத்திக்கான சர்வதேச நிதியுதவிகள் கிடைக்காது. அத்தகைய நிலைமையை உருவாக்காமல் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண வேண்டும் எனத்தெரிவித்தார்.

ஆனால் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவோ - இலங்கையில் ஏற்கனவே போர் தொடங்கிவிட்டது எனக்குறிப்பிட்டார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஏறாவூரில் படையினர் இரவிரவாக ஷெல் தாக்குதல்

## 7 பொதுமக்கள் படுகாயம்

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு-ஏறாவூரில் இராணுவத்தினர் நடத்திய ஷெல் தாக்குதலில் 7 அப்பாவிப் பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

ஏறாவூர் 5 ஆம் வட்டாரத்தில் நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டது.

படுகாயமடைந்தோரில் தம்பியப்பா மகேஸ்வரி (வயது 55) மற்றும் ஏறாவூர் விபுலானந்தா வித்தியாலய மாணவி சந்திரன் சங்கீதா (வயது 6) ஆகியோர் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தம்பியப்பா மகேஸ்வரி ஏறாவூர் மருத்துவமனையிலும், சங்கீதா மட்டக்களப்பு மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக அடையாளம் தெரியாத நபர்களால் நேற்று முன்தினம் இரவு 11.15 மணியளவில் ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக்கு பின்புறம் உள்ள பொலிஸ் நிலை மீது மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து அப்பாவி பொதுமக்கள் மீது இராணுவத்தினர் ஷெல் தாக்குதல் நடத்தினர். இதில் 6 வீடுகள் சேதமடைந்தன.

மேலும், நேற்று அதிகாலை 1 மணியளவில் 45 நிமிடத்துக்கும் மேலாக தொடர்ச்சியான தாக்குதல்களை இராணுவத்தினர் நடத்தினர்.

ஏறாவூர் 5 ஆம் வட்டாரத்தில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து நடத்திய தேடுதல் நடவடிக்கையில் 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கட்டடத் தொழிலாளர்களான அமிர்தலிங்கம் சுரேஸ் (வயது 20), சுப்பிரமணியம் சசிகுமார் (வயது 24), சித்திரவேல் பாலச்சந்திரன் (வயது 23), முத்துலிங்கம் வசந்தன் (வயது 22), செல்லப்பா சுதர்சனம் (வயது 19), யோகராசா கஜேந்திரன் (வயது 19) ஆகியோர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குப்பின் விடுவிக்கப்பட்டனர்.

தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற பகுதிகளை கண்காணிப்புக் குழுவினர் நேற்றுக்காலை 10 மணியளவில் பார்வையிட்டனர்.

## கண்காணிப்புக்குழுவின்...

அரசியல்துறை விசனம் தெரிவித்துள்ளது.

அல்லைப்பிட்டியில் நேற்றிரவு எட்டு அப்பாவி மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பாக மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் யாழ்.மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் இளம்பரிதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அந்தக் கடிதத்தில்-

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அப்பாவித் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட வகையில் அரச படைகள் மேற்கொண்டுவரும் படுகொலையின் நீட்சியாக தீவகத்தில் கடற்படையாலும், ஒட்டுக்குழுவாலும் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான இனவெறிப் படுகொலைகளை தங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறோம்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் மதுபோதையில் இருந்த கடற்படையினர், முகாமிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் உள்ள அல்லைப்பிட்டி பிலிப்பு நேரியர் தேவாலயத்துக்கு அண்மையில் செல்லத்துரை என்பவரின் வீட்டுக்குச் சென்று அங்கிருந்த அப்பாவி மக்களை சுட்டும், கைக்குண்டு வீசியும் படுகொலை செய்துள்ளனர்.

கடற்படையினருக்கு எதிராக எந்த வித சம்பவமும் இடம்பெறாத நிலையில் - திட்டமிட்ட வகையில் இந்தப்படுகொலைகளை செய்துள்ளனர். இவர்களுடன் அன்றையதினம் மாலை 6.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து இரண்டு பிக்கப் வாகனங்களில் சென்ற ஒட்டுக்குழுவினரும் இணைந்தே இந்தக் கொலைகளை அரங்கேற்றியுள்ளனர்.

இதில் இரு குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அறுவருடன் மொத்தமாக 08 பேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். அத்துடன், படுகாயமடைந்த மூன்று பேர் பலத்த சிரமங்களின் மத்தியில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கும் ஒருவர் மரணமாகியுள்ளார்.

சமகாலத்தில் வங்களாவடி, வேலணை மேற்கு, புளியங்கூடல், நாரந்தனை போன்ற இடங்களிலும் மதுபோதையில் நின்ற கடற்படையினரும், ஒட்டுக்குழுவினரும் மிலேச்சத்தனமாக அப்பாவி மக்களை குடும்பமாக படுகொலை செய்தும், அவர்களின் சொத்துக்களை எரியூட்டி நாசமாக்கியும், வெறியாட்டம் ஆடியுள்ளனர்.

வீடுகளில் எரிந்துகொண்டிருந்த மின் விளக்குகளை அணைக்கும்படி கட்டளையிடப்பட்டும், வீதிகளில் சென்ற வாகனங்களை நிறுத்தி முகப்பு விளக்குகளை அணைக்கும் படியும் அச்சுறுத்தப்பட்ட பின்னரே இந்தப் படுகொலைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

கடற்படையினரதும், ஒட்டுக் குழுக்களினதும் இந்த மிலேச்சத் தனமான நடவடிக்கைகள் அப்பட் டமான போர் நிறுத்த மீறல் என்பதற்கு மேலாக, சர்வதேச மனித உரிமை நியமங்களை மீறும் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடாகும். அத்துடன், பச்சிளம் குழந்தைகளை குடும்பத்துடன் சேர்த்து பரிதவிக்க கொன்றமையானது ஐ.நாவின் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் உரிமைகள் சாசனங்களை குழிதோண்டிப் புதைக்கும் ஒரு செயலாகும்.

மேலும், நேற்று ஆவரலங்காலைச் சேர்ந்த இராசையா புலேந்திரன் (வயது 30), அச்சுவேலி கதிரிப்பாயை சேர்ந்த பசுவலிங்கம் காண்டீபன் (வயது 25) ஆகிய அப்பாவி இளைஞர்களும் இராணுவத்தின் துப்பாக்கிரவைக்கு இரையாகியுள்ளனர்.

இவ்வாறாக யாழ். குடாநாட்டில் படையினரால் பால், வயது வேறுபாடின்றி குடும்பமாகவும் தனித்தும் மேற்கொள்ளப்படும் படுகொலைகளின் எண்ணிக்கை கட்டுங்கடங்காமல் செல்கின்றது.

கடந்த ஜெனிவாப் பேச்சுக்களின் பின்னர் இன்று வரையும் குடாநாட்டில் 56 அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இது தமிழின அழிப்பின் ஒரு வடிவமாகும். இந்தப் படுகொலைகள் தொடர்பாக கொலையுண்டவர்களின் உறவினர்கள், காயமடைந்தோர் ஆகியோருடன் நாங்கள் போதிய ஆதாரங்களையும், சாட்சிகளையும், சமர்ப்பித்திருந்தும் - படுகொலைகளுக்கு படையினரும், ஒட்டுக்குழுக்களுமே பொறுப்பானவர்கள் என்ற உண்மையை தாங்கள் இன்றுவரையும் உரிய முறையில் பகிரங்கமாக வெளிப்படுத்தாத காரணத்தால் தொடர்ந்தும் படையினர் இவ்வாறான படுகொலைகளைப் புரிவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

எனவே, இதனை பகிரங்கமாக வெளிப்படுத்தி இந்தப் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கடற்படைக்கு தொடர்பில்லையாம்

கொழும்பு—

அல்லைப்பிட்டியில் பொது மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு கடற்படையினரே காரணமென வெளியான செய்திகளை கடற்படை நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக கடற்படைப் பேச்சாளர் நேற்றுக் காலை தகவல் வெளியிடுகையில் -

அல்லைப்பிட்டி முகாமிலிருந்த படையினர் நேற்றுமுன்தினமிரவு 10 மணியளவில் இரண்டு பலத்த குண்டுச் சத்தங்களைக் கேட்டனர்.

இரவில் அந்தப் பகுதிக்குச் சென்று துப்புரவுப் பணிகளை மேற்கொள்வதில் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்ததால் அங்கு செல்லவில்லை.

கடற்படைமீது எந்தத் தாக்குதலும் நடத்தப்படவும் இல்லை. அவர்கள் பதில் தாக்குதலிலும் ஈடுபடவில்லை எனத் தெரிவித்தார்.

அதேவேளை - நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்கவும், கடற்படைத் தலைமையக அதிகாரியும் -

தம்மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு பதில் தாக்குதல் நடத்தினோம். இந்தச் சம்பவத்தில் நால்வர் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## மூதூரில்...

தெரியாத நபர்கள் இந்தப்படுகொலையை நடத்தினர்.

புளியடிச்சேனையைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் மற்றும் பெருவெளியைச் சேர்ந்த மதுரன் ஆகியோரே படுகொலை செய்யப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டனர்..

மூதூரில் கடந்த வியாழக்கிழமைக்குப்பின் 4 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அச்சுவேலி...

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் இவர்மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

இதேவேளை துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டபோது, பெருமளவு படையினர் பஸ் நிலையப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற நீதிவான் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

## கோப்பா...

(வயது 21) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த வெங்கட்கிருஷ்ணசர்மா ஹம்சிகா (வயது 04) எனும் சிறுமி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாரியம்மன் மோட்டோர்ஸ் நிறுவனம் அருகில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர்மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அதன் பின்னர் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டிலேயே மேற்படி இளைஞர் உயிரிழந்ததுடன், சிறுமி ஒருவரும் காயமமைடந்ததாகவும் தெரியவருகிறது.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற யாழ். மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற்கொண்டார். பின்னர் கோப்பாய் பொலிஸாரால் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தம்மீது கிரனேட் தாக்குதல் நடத்தியபோதே அந்த இளைஞனை தாம் சுட்டுக் கொன்றதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவத்தின்போது கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும், அதன் பின்னர் அந்தப் பகுதியில் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதலின்போது மூன்று இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

# தொடரும் படுகொலைகளால் தீவகத்தில் வாழமுடியாத நிலை

## பொது அமைப்புக்கள் ஒன்றியம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்—

தீவகத்தில் இனவெறியர்களால் பொதுமக்கள் கோரமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தால் மக்கள் அங்கு தொடர்ந்து வாழமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும், இதனால் பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகருமாறும் தீவக பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் தீவகத்தில் அல்லைப்பிட்டி, புளியங்கூடல் பகுதியில் நான்குமாத குழந்தை உட்பட 13 பேர் கோரமாக சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். 20 இற்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தேனீர் கடை உரிமையாளர் கோரமாக சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஆயுத தாரிகளின் கொலை வெறியாட்டத்தால் தீவகத்தில் நிம்மதியாக வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தொடர்ந்தும் இனவெறியர்கள் படுகொலை செய்வதற்கு திட்டமிட்டிருப்பதாக அறிய முடிகிறது.

எனவே, இனவெறிபிடித்த ஆயுததாரிகளின் தாக்குதலிலிருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதன் மூலம் தமது உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளமுடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேலணையிலும்...

இந்தச் சம்பவத்தில் தேனீர்க் கடை உரிமையாளரான இரத்தினம் செந்தூரன் (வயது 22) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினமிரவு 10.30 மணியளவில் வங்களாவடிச் சந்திக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் அங்கிருந்த வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையம், வீடியோ கடை, தேனீர் கடை என்பவற்றை தீ வைத்து எரித்தனர்.

கடை தீப்பற்றியவேளை, எரிகாயங்களுக்குள்ளான நிலையில் தேனீர்க் கடைக்கு வெளியே ஓடிவந்த மேற்படி தேனீர்க் கடை உரிமையாளர் மீது ஆயுத தாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் சம்பவ இடத்தில் உயிரிழந்ததாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## புளியங்கூடலில்...

பரமேஸ்வரி (வயது 55), மகன் சண்முகலிங்கம் காந்தரூபன் (வயது 22) ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற ஊர்காவற்துறை நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலங்களை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை - ஊர்காவற்துறை நடராசா வித்தியாலயத்துக்கு அருகில் இவர்கள் நடத்திவந்த தொலைத்தொடர்பு நிலையத்தை குண்டு வீசி தகர்த்துள்ளதாகத் தெரியவருகிறது.

அத்துடன், புளியங்கூடலில் இருந்த தியாகராஜா கடை, பிள்ளையார் வாணிபம், துவாரகன் தொலைத்தொடர்பு நிலையம், ஏதன் தையல் நிலையம், மதுசன் தொலைத்தொடர்பு நிலையம், நியூ கொழும்பு ஸ்ரோர்ஸ் மற்றும் வேலணை வங்களாவடியில்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையம் உட்பட 19 க்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் தீவைத்து எரிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

## அல்லைப்பிட்டியில்...

நான்கு மாதக் குழந்தை, நான்கு வயதுச் சிறுவன் மற்றும் தாய், தந்தை ஆகியோரைப் படுக்கையில் வைத்து கோரமாகச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

இதன்போது காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான வர்த்தகர் ஒருவரும் சிகிச்சை பலனளிக்காது நேற்று காலை உயிரிழந்தார்.

கறுப்பு நிற ஆடை மற்றும் முகத்தை கறுப்பு துணிகளால் மூடி வந்த ஆயுதக் குழுவினர் இந்தக் கோரத் தாண்டவமாடியதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் பாலசாமி கேதீஸ்வரன் (வயது 25), இவரது மனைவி கேதீஸ்வரன் அனெக் எஸ்தர் (வயது 25), இவரது மகனான கேதீஸ்வரன் தனுஷ்காந் (வயது 4), நான்கு மாதக் குழந்தையான கேதீஸ்வரன் யதுசன் ஆகியோரும் மூன்று பிள்ளைகளின் தந்தையான ஆபிரகாம் றொபின்சன் (வயது 28), ஒரு பிள்ளையின் தந்தையான செல்லத்துரை அமுதாஸ் (வயது 28), நான்கு பிள்ளைகளின் தந்தையான கணேஷ நவரத்தினம் (வயது 50), ஐந்து பிள்ளைகளின் தந்தையான யோசப் அந்தோனிமுத்து (வயது 64) ஆகியோரும் உயிரிழந்தனர்.

இதேவேளை-இந்தச் சம்பவத்தின்போது காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான வர்த்தகர் சின்னத்துரை சிவநேசன் (வயது 46) நேற்றுக் காலை உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் இரவு இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் ஊர்காவற்துறை பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டபோதிலும், பொலிஸார் பாதுகாப்பு காரணம் கருதி நேற்று காலையே சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டதாகவும், அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, சம்பவ இடத்துக்கு சென்ற ஊர்காவல்துறை நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலங்களை யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

உயிரிழந்த ஒன்பது பேரின் சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

## ஆவரங்கா...

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

ஆவரங்கால் சந்தியில் உள்ள கராஜ் ஒன்றுக்கு முன்பாக உள்ள மதகு ஒன்றில் தனது நண்பர்களுடன் இருந்தவேளை, பருத்தித்துறை வீதியூடாக மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்களே துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரவது சடலம் அச்சுவேலி பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### பசுவலிங்கம் காண்டீபன்

பாரதி வீதி, அச்சுவேலியைச் சேர்ந்த **பசுவலிங்கம் காண்டீபன்** 14.05.2006 நேற்று அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15.05.2006 (இன்று) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் அச்சுவேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

பாரதி வீதி,
அச்சுவேலி.

தகவல் :
குடும்பத்தினர்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.05.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.